# டோக் பெருமாட்டி கல்லூரி, மதுரை

## வரலாற்றுத் துறை

### வாழ்க்கை திறன் மேம்பாட்டு கல்வி 2015 –2016

LADY DOAK COLLEGE

SEMPER PRO VERITATE

# எங்க ஊரு அரிட்டாப்பட்டி...

வரலாறு - கடந்த கால நிகழ்வின் தொகுப்பு. ஒவ்வொரு நொடியும் நிகழும் செயல்பாடுகள் மறு நொடியே வரலாறாகின்றன. மனிதன் எவ்வாறு வாழ வேண்டும் எனும் முறைமைகளை வரலாறு கற்றுத் தருகிறது. நேற்றைய நிகழ்வுகளின் பதிவுகள், இன்றைய வாழ்விற்கு உறுதுணையாகவும், நாளைய வாழ்விற்கு படிப்பினையாகவும் அமைகின்றன. அவற்றின் பாரம்பரியத்தையும் நற்படிப்பினையும் பாதுகாப்பது ஒவ்வொரு குடிமகனின் கடமையாகும்.


மதுரை - பல நூற்றாண்டு பாரம்பரியத்தையும், வரலாற்றையும் கொண்ட நகரம். ஆதிகாலம் முதற்கொண்ட வரலாற்று எச்சங்களை தன்னகத்தே கொண்டது. பல் சமய கோட்பாடுகளும், அதனை சார்ந்த கல்வி முறைகளையும் கொண்ட சிறப்பு பெற்ற நகரம். இப்படிப்பட்ட வரலாற்று சிறப்புமிக்க நகரில், பெண்களுக்கென தொடங்கப்பட்ட முதற்கல்லூரி, நமது டோக் பெருமாட்டி கல்லூரி. பெண் கல்வி சமுதாய மாற்றத்தினையும், ஏற்றத்தினையும் ஏற்படுத்தக் கூடியது என்பதற்கேற்ப பல புதிய பாடத்திட்டங்களின் மூலம் இங்கு கல்வி பெறும் பெண்களின் வாழ்வில் உயர்வினை ஏற்படுத்தி வருகிறது.


அவ்வாறு, 2015 - 2016 கல்வியாண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட பாடத்திட்டமே **வாழ்க்கை திறன் மேம்பாட்டு கல்வி**.

“ஏட்டுச் சுரைக்காய் கரிக்கு உதவாது” - காகிதத்தில் எழுதிய சுரைக்காய் எவ்வாறு சமைக்க பயன்படாதோ அது போலவே நம் கற்கும் கல்வியை படிப்பதோடு நிறுத்தினால், அது வாழ்க்கைக்கு உதவாது. அதனை நடைமுறை வாழ்க்கைக்கு பயனுள்ள வகையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இதனை, மாற்று கல்வியால் மட்டுமே தர முடியும் என்பதை அறிந்த எமது கல்லூரி, “வாழ்க்கை திறன் மேம்பாட்டு கல்வி”யின் மூலம் நாங்கள் கற்றறிந்த அறிவை, சமூக சூழல்களோடு பொருத்தி பார்க்கவும் , சமுதாய நிலைகளைத் தெரிந்துக் கொள்ளவும், அவற்றில் எம்மால் முடிந்த மாற்றக்களை ஏற்படுத்தவும், அதன் மூலம் எங்கள் வாழ்வில் மாற்றங்கள் ஏற்படவும் வழிவகைச் செய்துள்ளது.

சிறப்புமிக்க இப்பாடத்திட்டத்திற்கு, எமது வரலாற்றுத் துறை எடுத்துக் கொண்ட தலைப்பு **“குடிமகளின் பொறுப்புகள்”**. ‘தானம்’ அறக்கட்டளையின் சுற்றுலாத் துறையின் பொறுப்பாளர் திரு. பாரதி அவர்களின் வழிகாட்டுதலில், எங்களது வாழ்க்கை திறன் மேம்பாட்டு கல்வியின் ஆய்வுக் களமாக தேர்ந்தெடுத்த பகுதி அரிட்டாப்பட்டி.

அரிட்டாப்பட்டி - மதுரையிலிருந்து வடக்கே 20 கிமீ தொலைவில், மேலூர் செல்லும் சாலையில் அமைந்துள்ள நரசிங்கம்பட்டி கிராமத்திலிருந்து 4 கிமீ தொலைவில், கழிஞ்சமலை எனும் மலையின் அடிவாரத்தில் இயற்கை எழில் சூழ அமைந்துள்ள வரலாற்று சிறப்புமிக்க கிராமமாகும்.





மூன்றாமாண்டு மாணவியரான எங்களது ஐந்தாம் கல்வி பருவத்தில் இதுவரை நாங்கள் கற்ற கல்வியை சமூகத்திற்கு எவ்வாறு எடுத்துச் செல்ல வேண்டும் என்பதை வகுப்பறை செயல்பாடுகளில் எங்களை ஈடுபடுத்தி முனைவர். மெர்சி பாக்கியம் அவர்களும் முனைவர் துர்க்கா தேவி அவர்களும் விளக்கினர். அதுவரை எங்களிடம் இல்லாத மாற்றங்களை அப்பொழுதே எங்களால் உணர முடிந்தது.

பின்னர், 2015 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 9 ஆம் தேதி முதல் முறையாக பேராசிரியர்கள் மற்றும் தானம் அறக்கட்டளை குழுவினரோடு அரிட்டாப்பட்டி கிராமத்திற்கு முதற்படி கள ஆய்விற்காக சென்றோம். கிராம மக்களிடம் எத்தகைய வரவேற்பு இருக்கும் என்ற அச்சத்துடன் சென்ற எங்களுக்கு முதல் நாளே சிறந்த வரவேற்பு கிடைத்தது. கழிஞ்ச மலை கோவிலில் வைத்து அரிட்டாப்பட்டி கிராம துணை பஞ்சாயத்து தலைவர் திரு. ரவிசந்திரன், மேலூர் வட்டார களஞ்சிய பொறுப்பாளர் திரு. லெட்சுமணன், அரிட்டாப்பட்டி கிராம சுய உதவி குழு தலைவியான திருமதி. முருகேஸ்வரி மற்றும் குழு உறுப்பினர்களான திருமதி. பஞ்சு பாக்கியம், திருமதி. கார்த்திகா, திருமதி. ராதிகா, திருமதி. மலைச்செல்வி, திருமதி. பாவனி, திருமதி. கிருட்டினம்மாள் ஆகியோருடன் கலந்துரையாடல் நிகழ்ந்தது. அப்பொழுது, திரு. பாரதி அவர்கள் அரிட்டாப்பட்டி கிராமத்தின் வரலாற்றை எடுத்துரைத்தார். இதனை தொடர்ந்து, அரிட்டாப்பட்டி திரு. ரவிசந்திரன் அவர்களும் அரிட்டாப்பட்டியின் தனி சிறப்பினை எடுத்துரைத்தார்.





இதன் பிறகு, கள ஆய்வை எந்தெந்த தலைப்புகளில் மேற்கொள்ளலாம் என மாணவிகளான எங்களிடம் கேட்கப்பட்டது. நாங்கள் 37 மாணவியரும் 37 விதமான தலைப்புகளை தெரிவித்தது கிராம மக்களுக்கு மட்டுமில்லாது எங்களுக்கும் பிரமிப்பை ஏற்படுத்தியது. பின்னர், கிராம மக்களின் அன்பான உபசரிப்பில் வயிறு குளிர கூழ் அருந்தி, மன நிறைவோடு கல்லூரி வந்தடைந்தோம்.

பின்னர், எட்டு குழுக்களாக பிரிக்கப்பட்டு எட்டு தலைப்புகளின் கீழ் ஆய்வினை மேற்கொள்ள முடிவெடுக்கப்பட்டது. இதன் ஆரம்பமாக டிசம்பர் மாதம், திரு. பாரதி, திரு. ரவிசந்திரன், திரு. லெட்சுமணன், மற்றும் திருமதி. முருகேஸ்வரி அவர்களுடன் கல்லூரியில் வைத்து கலந்துரையாடல் நடைப்பெற்றது. எட்டு குழு தலைவியரும் தங்கள் குழு தலைப்பினைப் பற்றிய விளக்கத்தினை அளித்து அதற்கான தெளிவினையும் பெற்றனர்.







அரிட்டாப்பட்டியில் பொறுப்புள்ள சுற்றுலா, நீர் நிலைகள், கோவில்கள் மற்றும் திருவிழாக்கள், பாரம்பரிய உணவுகள் மற்றும் மருத்துவம், பழமொழிகளும் அவற்றின் வரலாற்று பின்னணிகளும், நாட்டுப்புற கலைகள், பாரம்பரிய பொருட்கள் மற்றும் அரிட்டாப்பட்டியின் சுற்றுச்சூழல் மேம்பாடு ஆகிய எட்டு தலைப்புகளே அனைவரின் ஒப்புதலோடு தேர்ந்தெடுக்கப்பட்ட தலைப்புகளாகும்.

இவ்வாய்வின் வெளிப்பாடுகளை இனி காண்போம்.

மலையினை வாழ்வாதார கொண்ட இக்கிராமத்தில் 2000 ஆம் ஆண்டுகளுக்கு முன்பு ஏற்படுத்தப்பட்ட சமணக் குகையும், தமிழ் பிராமி மற்றும் வட்டெழுத்துக் கல்வெட்டுகளும், குடை வரைக் கோவிலும் காணப்படுகின்றன.







'நீரின்றி அமைய உலகு' என்பது போல், அரிட்டாப்பட்டி கிராமம் மழைக் காலங்களில் மலைகளில் விழும் நீரை சேமித்து வைப்பதற்காக தம் மக்களால் வெட்டப்பட்ட 52 நீர் நிலைகளையும் இயற்கை ஊற்றுகளாக 200க்கும் மேற்பட்ட சிற்றூற்றுகளையும் கொண்டுள்ளது. இவற்றுள் ஆனைக்கொண்டான் கண்மாய், பெரியகுளம் கண்மாய், காமன்குளம் கண்மாய், பொழுது முகம் தெரியாத ஊற்று, வையாரி குளம், தர்மக்குளம், மடத்துக்கிணறு, இளமாத்தான் ஊரணி ஆகியவை குறிப்பிட தகுந்தவையாகும். இந்நீர் நிலைகளையே அரிட்டாப்பட்டி கிராம மக்களின் ஆதாரம். மதுரையில் ஆழ்துளையிட்டு நீரைத் தேடும் இக்காலத்திலும், இக்கிராம மக்கள் தங்கள் நீர் ஆதாரங்களை முடிந்தளவு பாதுகாத்து வருகின்றனர்.





'கோவிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' எனும் முதுமொழிகேற்ப அரிட்டாப்பட்டி வரலாறு மற்றும் பாரம்பரியம் போற்றும் வழிபாட்டு தலங்களைக் கொண்டுள்ளது. இயற்கை வழிபாட்டிற்கு முக்கியத்துவம் வழங்கும் அரிட்டாப்பட்டியில் சமண சமய குகையோடு, பாண்டியர் கால குடை வரை சிவன் கோவிலும், சிதிலமடைந்த நிலையில் காணப்படும் பழம்பெரும் சிவன் கோவிலும் உள்ளன. மேலும் இளமை நாயகி அம்மன், சின்ன அடக்கி, பெரிய அடக்கி, செங்குட்டு அய்யன், சின்ன அய்யன், மலட்டலகி அம்மன், மத்தத்து அய்யன், மந்த கருப்பசாமி ஆகிய கோவில்களும் உள்ளன. இக்கோவில் திருவிழாக்களில் போது நடைபெறும் மாவிளக்கு எடுத்தல் சிறப்பு பெற்றதாகும். 'பனிக்கொறைக்கான்' என்றழைக்கப்படும் பாறைக்கு சென்று நெல் குத்தி மாவு இடித்து மாவிளக்கு எடுத்தல், புரவி எடுப்பு போன்ற நிகழ்வுகள் இக்கிராம பாரம்பரியத்தின் சிறப்புகளாகும்.



இவ்விழாக்களின் சிறப்பு நிகழ்வுகளாகவும், மற்றும் மனித வாழ்வோடு பின்னிப்பிணைந்து, மனித பிறப்பு முதல் இறப்பு வரையான நிகழ்வுகளுக்கு பாடப்படும் பாடல்களான நாட்டுப்புறப் பாடல்களும், பாரம்பரிய ஆட்டங்களும் நிறைந்த கிராமம் அரிட்டாப்பட்டி.

அரிட்டாப்பட்டியில் கும்மி, தெம்மாங்கு, தாலாட்டு, ஒப்பாரி ஆகியவை முக்கியமான நாட்டுப்புறப் பாடல்களாகும். கும்மி பொதுவாக ஆடி, ஆவணி மாதங்களில் முளைப்பாரி விழாவின் போது பெண்கள் மற்றும் ஆண்களாலும் நிகழ்த்தப்படுகிறது. கும்மிப் பாடல்களை பாடிக்கொண்டே களைத்துப்போகும் வரை வட்டமாக நின்று கும்மி கொட்டுவார்கள். இக்கும்மியாட்டம் சமுதாய ஒற்றுமையை காட்டுகிறது.





பாரம்பரிய ஆட்டங்களில், ஒயிலாட்டம் மற்றும் சேத்தாண்டியாட்டம் முக்கிய பங்கு வகிக்கின்றன. சேத்தாண்டியாட்டம், அரிட்டாப்பட்டியில் மிகவும் முக்கியமான ஆட்டம் ஆகும். இந்த ஆட்டமும் ஆண்களால் ஆடப்படுகிறது. இந்த ஆட்டத்தில் ஆண்கள், சிறுவர்கள் ஆகியோர் உடம்பில் சேற்றைப் பூசிக்கொண்டு ஆடுவார்கள். இது தவிர அரிட்டாப்பட்டியின் பாரம்பரிய விளையாட்டுகளாக இன்றும் கடைப்பிடிக்கப்படுபவை, பூப்பறிக்க வருகிறோம், உப்பு வைத்து விளையாடுதல், பன்னாங்குழி, கிச்சுகிச்சு தாம்பாலம் ஆகிய நான்கு விளையாட்டுமே ஆகும்.






இப்படி பாரம்பரிய சிறப்புகளை கொண்டுள்ள அரிட்டாப்பட்டி, பழங்கால பொருட்களின் காட்சியகமாகவும் திகழ்கிறது. அரிட்டாபட்டியில் அழியா சிறப்பு பெற்ற பாரம்பரிய பொருட்களாக ஊத்தா, பனப்பறி, குளுமை, கொட்டுப்பறி, விளக்கு, முளைப்பாரி பூக்கூடை, மாடுமணி, வெற்றிலை இடிப்பான், திருக்கை உரல், சாமிப்பெட்டி, தூப களையம், ஐந்து முக கொப்பரை, இரவைப் பெட்டி, பழமையான தூண்டில், துணுத்து களையம், ஏர் கலப்பை, கூந்தாளம், இளவட்டக்கல், காணிக்கை பெட்டி, கொக்கு கூடு, எச்சில் தும்பா, ஓலைச்சுவடி, நெல் அவிட்டான் கருவி, சூரி, வட்டில் மற்றும் தும்பு போன்றவை காணப்படுகின்றன. இவையனைத்தும் கடந்த காலங்களில், நம்முடைய வாழ்க்கையில் முக்கியமான இடத்தினை பெற்று, தினந்தோறும் நடைமுறை வாழ்க்கையில் பயன்பாட்டில் இருந்துள்ளன.








பாரம்பரியப் பொருட்களைப் போன்றே கிராமங்களின் அடையாளமாக திகழ்வது பழமொழிகளாகும். இவை, ஒரு சமுதாயத்தில் நீண்ட காலமாகப் புழக்கத்தில் இருந்து வரும் அனுபவக் குறிப்புகள் ஆகும். பழமொழிகள், காலந்தோறும் தோன்றும் அரிய பெரிய உண்மைகளை எளிய மொழியால் கூறும் வாய்மொழி இலக்கியமாகும். இவை, முற்கால வரலாற்றை எடுத்துரைக்க இக்காலத்திலும் உதவும் வாய்மொழி ஆவணங்களாகும். இவ்விதமாக பழமொழிகள் அறிவுக்கு வளம் சேர்க்கின்றன என்பது ஒருபுறம் இருக்க, அந்தப் பழமொழிகளைப் படைத்து வழங்கி வந்த மக்களின் பல்வேறு மன இயல்புகளையும், பண்பாட்டையும் கள்ளங்கபடம் இன்றி விளக்குவதோடு இல்லாமல் இயற்கை விவசாய முறை, மருத்துவம், பழக்கவழக்கம், நாகரிகம் மற்றும் இயற்கை சூழல் ஆகியவற்றை அழகாக படம் பிடித்து காட்டுகின்றன என்பதனாலேயே, அண்மைக்காலமாக ஆராய்ச்சியாளர்கள் உலகின் ஒவ்வொரு மொழியிலும் உள்ள பழமொழிகளை ஆய்வறியத் தொடங்கியதோடு, அவற்றைத் தொகுத்து வெளியிடவும் தொடங்கியுள்ளனர். அவ்வகையில், பேச்சு வழக்கில் பழமொழிகளைக் கையாண்டு வருவதில் இன்றளவும் கிராமங்கள் முன்னோடியாகவே திகழ்கின்றன, அவ்வாறு பழமொழிகளை வாழ்க்கை பதிவுகளில் கையாளும் கிராமம் அரிட்டாப்பட்டி.





தொல்லியல் வரலாற்று மற்றும் பண்பாட்டுச் சிறப்புமிக்க அரிட்டாப்பட்டி கிராமத்தின் பழமொழிகளையும் அவற்றின் வரலாற்றுப் பின்னணிகளையும், வரலாறு, விவசாயம் மற்றும் சுற்றுச்சூழல் எனும் பெரும் பிரிவுகளின் கீழ் பண்பாடு, கோவில்கள், சமுதாயம் மற்றும் நீர் நிலை எனும் வகைகளாக வகுத்துக் ஆராய்ந்துள்ளோம். அவை முறையே 'அரிட்டாப்பட்டில பிறந்துட்டு பனிக்கொறைக்கான் பாறைக்கு பாதை தெரியலன்றாலே', 'ஆட்டக் கழுதை-தயாக்குன அரிட்டாப்பட்டி', 'வண்ணக் கொட்டான் சின்னக் கொட்டான் வகை வகையா வரைஞ்ச கொட்டான்', 'ஊருக்கு தொக்கு பிள்ளையார்', 'சொல்லுப் பொருக்காத இளமை நாச்சிக்கு சொந்த கிராமம் அரிட்டாப்பட்டி', 'அச்சமில்லாதவன் அம்பலம் ஏறுவான்', 'அச்சாணி இல்லாத தேர் முச்சானும் ஓடாது', 'இளங்கன்று பயமறியாது', 'நெல்லுக்கு நண்டோட வாழைக்கு வண்டியோட தென்னைக்குத் திருவாரூர்த் தேரோட', 'வைக்கப் பெருத்தது வையக்கரை வாழை வருத்தது அரிட்டாப்பட்டி', 'பொழுது முகம் தெரியாத ஊற்று', 'இறைத்த கிணறு ஊறும் இறையாத கேணி நாறும்', 'மாடக்குளம் கண்மாய் உடைஞ்சா மதுர எம்மாத்திரம்'

பாரம்பரிய உணவு முறை என்பது பழங்காலந்தொட்டு நம் முன்னோர்கள் பாரம்பரியமாகப் பின்பற்றி வந்த உணவு முறைகளாகும். தமிழ்ப் பண்பாட்டில் உணவுமுறை மிகவும் சிறப்புமிக்க இன்றியமையாத ஒன்றாகும். தமிழர் உணவு பழக்கவழக்கங்களுள் விருந்தோம்பல் பண்பு உலகப்புகழ் பெற்றது. அறுசுவை உணவு உண்ணும் தமிழர் கலாச்சாரத்தில் உணவே மருந்தாகவும் விளங்குகின்றது. பாரம்பரிய உணவு முறைகளில் உணவும் மருந்தும் ஒன்றிணைந்து மக்களின் நல்வாழ்வை உலகறியச் செய்தது.

அரிட்டாபட்டியில் பல வருடங்களுக்கு முன்பிருந்தே மக்கள் அங்கு விளையும் செடிகள் மற்றும் அதன் மூலிகைக் குணங்களைக் கொண்டு பாரம்பரியமாக வீட்டிலேயே எளிய முறையில் இயற்கை மருத்துவம் செய்து வருகின்றனர். அரிட்டாபட்டியில் பல்வேறு மருத்துவக்குணம் கொண்ட மூலிகை செடிகள், கீரைகளும், சில குறிப்பிட்ட காய்கறிகள், பழங்கள், தானியங்கள், பயறு வகைகள் போன்றவையும் விளைகின்றன.



இவ்வாறு சிறப்புமிக்க சுற்றுச்சூழல், வரலாறு மற்றும் பண்பாட்டு சிறப்புமிக்க கிராமம், சுற்றுலா தலத்திற்கான எல்லா சிறப்புகளையும் கொண்டுள்ளது. வரலாற்றுச் சுற்றுலா, கலை சுற்றுலா, மருத்துவ சுற்றுலா, மனமகிழ் சுற்றுலா, ஆய்வு சுற்றுலா, பண்பாட்டு சுற்றுலா, பாரம்பரிய சுற்றுலா, சுற்றுச்சூழல் சுற்றுலா, கல்வி சுற்றுலா, தொல்லியல் சுற்றுலா, சமய சுற்றுலா, ஆன்மிக சுற்றுலா, கானக சுற்றுலா, சாகச சுற்றுலா, பொழுதுபோக்கு சுற்றுலா, பண்டிகை சுற்றுலா போன்ற சுற்றுலாகளுக்கு ஏற்ற இடமாக விளங்குகிறது.



இதனை, சிறந்த சுற்றுலாத் தலமாக மாற்ற வேண்டும் என்ற கோரிக்கையை கிராம மக்களிடம் முன்னிறுத்திய போது, சுற்றுலாவினால் ஏற்படும் பாதிப்புகளினால் அரிட்டாப்பட்டி பாதிக்கப்படும் என அஞ்சினர். இருப்பினும், சில கட்டுப்பாடுகளோடு பொறுப்புள்ள சுற்றுலா மையமாக அரிட்டாப்பட்டி மாற எங்களோடு கைகோர்த்தனர். இதன் பயனாக, '**பொறுப்பான சுற்றுலா வளர்ச்சிக் குழு**' அரிட்டாப்பட்டியில் ஏற்படுத்தப்பட்டது. இதன் நோக்கம் **'புதுமையை வளர்ப்போம், பழமையை பாதுகாப்போம்'**" என்பதாகும். இதன் மூலம் அரிட்டாப்பட்டியின் பாரம்பரியத்தினை பாதுகாத்து, அனைவருக்கும் அறியச்செய்து அதன் புகழை பரைசாற்றுவது நோக்கமாகும். இக்குழுவின் உறுப்பினர்கள்: திருமதி. முருகேஸ்வரி, திருமதி. அழகம்மாள், திருமதி. பஞ்சு, திருமதி. ராமு, திருமதி. ராதிகா, திருமதி. பேபி, திருமதி. கார்த்திகா, திருமதி. பவானி. இவர்கள் தங்கள் ஊருக்கு வருகை தரும் சுற்றுலா பயணிகளுக்கு, நல்ல விருந்தோம்பல் அளித்து அவர்களுக்கு தங்கள் ஊரின் முக்கியத்துவத்தினை அறியச்செய்வர்.



**இக்குழுவின் பிற செயல்பாடுகள்**

- அரிட்டாபட்டியினை பொறுப்பான சுற்றுலாத் தலமாக மாற்றுவதற்கு ஏற்ற நடவடிக்கைகளை எடுத்தல்.
- சுற்றுச்சூழலுக்கு எவ்விதப் பாதிப்புகளும் ஏற்படாமல் அதன் இயற்கை தோற்றத்தினைப் பாதுகாத்தல்.
- மரக்கன்றுகள் நடுதல்.
- பாலீத்தின் பயன்பாட்டினைக் குறைத்து, நாளடைவில் அதனை பயன்பாட்டில் இல்லாமல் ஆக்குதல்.
- காண்பதற்கு அரிதான நீர் நிலைகளை நம் முன்னோர்கள் பாதுகாத்து நமக்கு அளித்தது போல், நாமும் பாதுகாத்து நம் வருங்காலத் தலைமுறையினருக்கு அளித்தல்.
- பாரம்பரியத்திற்கு எவ்வித சீர்கேடும் ஏற்படாமல் அரிட்டாபட்டியினை சுற்றுலாத தலமாக மாற்றுதல்.
- நம்மால் இயன்ற அளவில் பிற அமைப்புகளுடன் இணைந்து, களஞ்சியம் போன்ற சுய உதவிக் குழுக்கள் ஆரம்பித்து, பொருளாதாரத்திலும் முன்னேற்றம் அடைதல்.
- சுற்றுலாத் தலமாக மாற்றுவதன் மூலம் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குதல்.

பழம் பெருமை வாய்ந்த கிராமமான அரிட்டாப்பட்டி மக்கள் தங்கள் பாரம்பரியமிக்க மலையினைப் போற்றி பாதுகாத்து வருகின்றனர்.இவ்வாறு இயற்கையோடு இணைந்த வாழ்வினை இன்றளவும் பின்பற்றி வரும் அரிட்டாப்பட்டி மக்களின் வாழ்வில் நவீனத்தின் தாக்கம் இல்லாமல் இல்லை. மலையைச் சார்ந்துள்ள அவர்களின் வாழ்க்கைச் சூழலில், நவீனத்தின் தாக்கம் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. இதனால், கிராம வரலாறு மட்டுமின்றி, அதன் சுற்றுச்சூழலும் பாதிக்கத் தொடங்கியுள்ளது. ஆலை கழிவுகள், ரசாயன உரங்களின் தாக்கத்தால் நீர் நிலைகளும் மண் வளமும் பாதிப்படைந்து வருகின்றன. மேலும் வெளி மீன்களின் வளர்ப்பால், நாட்டு மீன்களின் எண்ணிக்கையும் குறையத் தொடங்கியுள்ளது.





**ஆய்வினால் ஏற்பட்ட சமுக மாற்றங்கள் / பயன்பாடுகள்**

எமது வாழ்க்கை திறன் மேம்பாட்டு கல்வி திட்டத்தின் முதல் வெற்றியாக நாங்கள் கருதுவது திரு. பாரதி அவர்களின் வழிகாட்டுதலில் 2016 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26 ஆம் நாள் நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் பங்கேற்று ‘அரிட்டாப்பட்டியைப் பொறுப்புள்ள சுற்றுலா’ தலமாக்கும் தீர்மானத்தை நிறைவேற்றியது. கிராம சபை கூட்டங்கள் பொதுவாக பல வாக்குவாதங்களோடு நடைபெறும் களமாக இருக்கும். இருப்பினும், மாணவிகளான எங்களது கருத்துகளுக்கு மதிப்பளித்து தீர்மானம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

பிப்ரவரி மாதம் 7 ஆம் தேதி, கிரைஸ்ட் பல்கலைகழக பேராசிரியர்கள், எமது கள ஆய்வு தலமான அரிட்டாப்பட்டிக்கு வருகைப் புரிந்து, கிராம மக்களோடும், திருமிகு. பாரதி அவர்களோடும் கலந்துரையாடியதோடு, மாணவியரிடமும், பேராசிரியரிடமும் ஆய்வினைப் பற்றிய விளக்கத்தினை கேட்டறிந்துக் கொண்டு ஆய்வு சிறப்பான முறையில் நடைபெறுவதாக வாழ்த்தி சென்றனர். இது கிராம மக்களுக்கு உத்வேகமாக அமைந்தது.



பிப்ரவரி மாதம் 9 ஆம் தேதி ‘நமஸ்தே இந்தியா’ எனும் தலைப்பில் கலாச்சார பகிர்தலுக்காக இந்தியா வந்துள்ள பிரான்ச் நாட்டு போர்க்ஸ் பல்கலைகழக சமையல் கலை மாணவ மாணவியர் 16 பேருடன் எங்கள் குழுவும் இணைந்தத ’பாரம்பரிய உணவு திருவிழாவை’ ‘தானம்’ அறக்கட்டளை சார்பில், திருமிகு. பாரதி அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார். கிராமத்திலுள்ள 8 வீடுகளில் கிராமிய உணவுகளான மீன் குழம்பு, தினை பாயாசம், கொள்ளு ரசம், எள்ளு துவையல், கேழ்வரகு ரொட்டி, பானகரம், புளியோதரை, முருங்கை கீரை, உளுந்தங்களி ஆகியவற்றை தயாரிப்பது குறித்து கிராம பெண்களுடன் சேர்ந்து எங்கள் குழுவும் விளக்கம் அளித்தோம். இதனை வெளிநாட்டு மாணவ மாணவியர் குறிப்பெடுத்து கொண்டனர். இதன் மூலம், பொறுப்புள்ள சுற்றுலாவிற்கான நடைமுறைகளை பின்பற்ற முடிந்ததோடு, கிராம மக்கள் கடைப்பிடிக்க வேண்டியதின் அவசியத்தை உணர்த்த முடிந்தது. இதனை வெளிநாட்டு சுற்றுலாவினருக்கும் கற்றுக் கொடுக்க முடிந்தது


அயிரையை அலசி... விராலை உரசி...


French catering students dish it out Tamil style

பிப்ரவரி மாதம் 17 ஆம் தேதி, ‘கலாச்சார திளைத்தல்’ எனும் தலைப்பில், எமது இரண்டாம் ஆண்டு மாணவியரை அரிட்டாப்பட்டிக்கு அழைத்து சென்றோம். இந்நிகழ்வின் சிறப்பு அழைப்பாளர்களாக பேராசிரியர் வெங்கட்ராமன் அவர்களும், கல்வெட்டாளர் வேதாசலம் அவர்களும் வருகை தந்திருந்தனர். மேலும் திருமிகு பாரதி அவர்களின் ஏற்பாட்டின் பேரில் பொதிகை தொலைக்காட்சியிலிருந்து இந்நிகழ்வு முழுவதுமாக படம் பிடிக்கப்பட்டது. இவர்கள் மற்றும் கிராம மக்கள் முன்னிலையில் நாங்கள் எங்களது ஆய்வினை விளக்கி, எங்களது சந்தேகங்களை பேராசிரியர் வெங்கட்ராமன் மற்றும் கல்வெட்டாளர் வேதாசலம் அவர்களிடம் கேட்டு தெரிந்து கொண்டோம். இதன் மூலம் வாழ்க்கை திறன் மேம்பாட்டு கல்வியின் அவசியத்தை இரண்டாம் ஆண்டு மாணவியருக்கு உணர்த்தினோம். கிராம மக்கள் தங்கள் கிராம சிறப்பினை மேம்மேலும் பாதுகாப்போம் என உறுதி எடுத்தனர். மேலும் பாரம்பரியத்தின் சிறப்பினை உலகரிய செய்ய ஊடகத்தின் துணை அவசியம். இந்நிகழ்வு விரைவில் ஒளிப்படுத்த பட உள்ளது. இதன் மூலம் பாரம்பரியத்தை பேணி காப்பதின் அவசியம் அனைவராலும் உணரப்படும் என நம்புகின்றோம்.





**எங்களிடம் ஏற்பட்ட மாற்றங்கள்**

இவ்வாய்வின் மூலம் எங்களது கல்லூரி கல்வியை, கிராம மக்களின் அனுபவ கல்வியோடு இணைத்து “கூடி வாழ்ந்தால் கோடி நன்மை” என்பதை உணர்ந்தோம். “ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு” என்பதை இக்கிராம மக்களின் செயல்பாடுகளில் இருந்து உணர்ந்துக் கொண்டோம்.

ஏனெனில் மக்கள் தங்கள் வாழ்வாதரமான மலையினைப் பாதுகாக்க கடுமையாக போராடியுள்ளனர். இன்றளவும் போராடி வருகின்றனர்.





உழவு தொழிலின் சிறப்பை அனுபவித்தோம்.




123.45
மாணவியர் ஆய்வு
மோசடி கும்பல் கைது

இவ்வாய்வின் மூலம், எங்களிடம் இருந்த பய உணர்வு அகன்றதோடு, வாழ்க்கைக் கல்வியைக் கற்றுக் கொண்டோம். ஒரு குடும்பத்தில், சமுகத்தில் பெண்களின் நிலை என்ன? என்பதைக் கண்கூடாக தெரிந்துக் கொண்டோம். பெண்ணின் அறிவே தலைமுறையின் வெளிச்சம் என்பதை உணர்ந்துக் கொண்டோம். ஏனெனில், நாங்கள் சேகரித்த பழமொழிகள் அனைத்தும் வயதான பெண்களிடமிருந்தே. மேலும், எங்களை வழிநடத்திய சுய உதவிக் குழு பெண்களும், மற்றவர்களுமே, இவ்வூரின் மலையைப் பாதுகாக்க முன்னின்றுள்ளனர்.





பெயரளவில் மட்டுமல்லாது எங்களது குடும்ப பாரம்பரியத்தையும் அறிந்து கொள்ள தொடங்கியுள்ளோம். எங்களில் சிலர் தங்களது பெற்றோரையும் அரிட்டாப்பட்டிக்கு அழைத்து சென்றதின் மூலம் பெற்றோரிடமும் இதன் தாக்கத்தை உணர முடிந்தது.

**எதிர்கால நடவடிக்கைகள்**

மக்கள் தங்கள் கடைப்பிடித்து வந்த பாரம்பரிய பழக்கங்களை மீண்டும் கடைப்பிடிக்க வேண்டும். இவற்றை இந்நவீன காலத்தில் முழுமையாக பயன்பாட்டில் கொண்டு வருதல் கடினமே. இருப்பினும், ஊர் திருவிழா, கோவில் திருவிழா மற்றும் குடும்ப விழாக்களின் பொழுது கடைப்பிடிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அரிட்டாப்பட்டி மக்கள், ஏழு மலைகளில் விழும் மழை நீரின் சேகரிப்பை வைத்தே ஒரு போக விவசாயம் செய்து வருகின்றனர். பெரும்பாலும், இவர்கள், நவீன விவசாய முறையினையேப் பின்பற்றி வருகின்றனர். இயற்கை விவசாயம் செய்ய சிறந்த இடமாக விளங்கும் அரிட்டாப்பட்டி, பாரம்பரியச் சின்னமான மலைகளைக் காப்பது போல் இயற்கை விவசாயத்தையும் காக்க வேண்டும்.

## நன்றி

வாழ்க்கை திறன் மேம்பாட்டு கல்வியின் மூலம் ஏதோ ஒரு கிராமம் எனும் நிலையில் இருந்த அரிட்டாப்பட்டியை **எங்க ஊரு அரிட்டாப்பட்டியாக** மாற்றியமைக்க உதவிய

- முனைவர். மெர்சி புஷ்பலதா, கல்லூரி முதல்வர்
- முனைவர். லில்லி ஜெயசிலி பாலசிங், துறை தலைவர்
- முனைவர். மெர்சி பாக்கியம் மற்றும் முனைவர் துர்க்கா தேவி, துறையின் வாழ்க்கை திறன் மேம்பாட்டு கல்வி வழிகாட்டுனர்கள் மற்றும் துறை பேராசிரியர்களான
- திருமதி. ஹெப்சிபா ஜோசப்
- முனைவர். மு.வள்ளியம்மாள்
- திருமதி. டி. முத்துலெட்சுமி
- செல்வி.எம். முத்துலெட்சுமி
- முனைவர். ஜெ ஜெயமதி அவர்களுக்கும்
- 'தானம்' அறக்கட்டளையின் சுற்றுலாத் துறையின் பொறுப்பாளர் திரு. புாரதி
- அரிட்டாப்பட்டி கிராம துணை பஞ்சாயத்து தலைவர் திரு. ரவிசந்திரன்
- மேலூர் வட்டார களஞ்சிய பொறுப்பாளர் திரு. லெட்சுமணன்
- அரிட்டாப்பட்டி கிராம சுய உதவி குழு தலைவியான திருமதி. முருகேஸ்வரி மற்றும் குழு உறுப்பினர்களான திருமதி. பஞ்சு பாக்கியம், திருமதி. கார்த்திகா, திருமதி. ராதிகா, திருமதி. மலைச்செல்வி, திருமதி. பாவனி, திருமதி. கிருட்டினம்மாள் அவர்களுக்கும்
- கிராம மக்களுக்கும்
- கல்லூரியின் வாழ்க்கை திறன் மேம்பாட்டு கல்வி குழுவிற்கும் எங்கள் நன்றிகள்.



**அரிட்டாபட்டியில் பொறுப்புள்ள சுற்றுலா**
- புா. லெட்சுமி பிரியா (13HIS013)
- உ. சிந்து (13HIS036)
- சே. ஆனிதா (13HIS002)
- க. மகதி (13HIS014)

**அரிட்டாபட்டியின் நீர் நிலைகள்**
- மா.ராஜகுமாரி (13HIS025)
- கு. ரம்ய பாரதி (13HIS027)
- பா. ரிமோனா ஜெனிபர் (13HIS029)
- ஜா.அ. ஜெனி'ா மோள் (13HIS048)

**அரிட்டாபட்டியின் கோவில்கள் மற்றும் திருவிழாக்கள்**
- அ.ர.அன்னபூரணி (13HIS003)
- பா.கீதாஞ்சலி (13HIS007)
- க.ராஜகுமாரி (13HIS024)
- அ.ரம்ஜான் பேகம் (13HIS028)

**அரிட்டாபட்டியின் பாரம்பரிய உணவு மற்றும் மருத்துவம்**
- நா. பாலாஸ்ரீ (13HIS042)
- க. கற்பகம் (13HIS010)
- பா. மதனா (13HIS015)
- பா. பிரியங்கா (13HIS023)
- ஜா. சமாபி (13HIS044)

**அரிட்டாப்பட்டி பழமொழிகளும் அவற்றின் வரலாற்றுப் பின்னணிகளும்**
- ச. சூரிய காயத்ரி (13HIS038)
- பா. பிரியா (13HIS020)
- க. சுகுமாரி (13HIS037)
- சு. எஸ்தர் (13HIS006)
- மு. சங்கீதா (13HIS032)

**அரிட்டாபட்டியின் நாட்டுப்புறக் கலைகள்**
- கு.மோகனப்பிரியா (13HIS017)
- ஐ.ஹெர்லின்சாரதி (13HIS009)
- செ.சத்யப்பிரியா (13HIS035)
- ரா.பிரியங்கா (13HIS022)
- அ.ருமானா (13HIS031)

**அரிட்டாபட்டியில் காணப்படும் பாரம்பரிய பொருட்களும் மற்றும் அதன் பயன்களும்**
- மா.மீனாட்சி (13HIS016)
- பா.குணா தேவி (13HIS008)
- செ.கனி மொழி (13HIS043)
- கோ.முத்து மகாலெட்சுமி (13HIS018)

**அரிட்டாப்படியின் சுற்றுசூழல் பாதுகாப்பு**
- கா.சரஸ்வதி (13HIS034)
- சே.சந்திகா (13HIS033)\
- பா.தேவி (13HIS005)
- அ. நஸ்ரின் பாத்திமா (13HIS019)
- செ.ரேஷ்மா(13HIS030)

———-x———--


எங்க ஊரு அரிட்டாப்பட்டி